



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.7.2025) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற தமிழ்நாட்டின் புத்தமை (IN2TN) அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டினையொட்டி அமைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கண்காட்சியில், காட்சிப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், , ஐடிஎன்டி மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி வனிதா வேணுகோபால், தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (NRDC) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (ஓய்வு) கமாண்டர் அமித்ரஸ்தோகி, ஜெட்வெர்க்கின் எலக்ட்ரானிக்ஸ் தலைவர் ஜோஷ் ஃபோல்கர், ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சி பூங்காவின் குழு தலைமைச் செயல் அலுவலர் நடராஜன் மல்லுப்பிள்ளை, அஸ்ட்ராஜெனெகா இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர் சிவகுமார் பத்மநாபன், மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உடனிருந்தனர்.



சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 2025–26 ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் பல் மருத்துவம், அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% உள் ஒதுக்கீடு, சிறப்பு பிரிவு ஒதுக்கீடு ஆணைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.07.2025) வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி, துணை மரு.ஷீபா மற்றும் இயக்குநர்கள் மரு.கராமத், மரு.சாந்தினி, உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

## காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 42 வது கூட்டம்



காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தார் அவர்கள் தலைமையில் நேற்று (30.07.2025) புதுதில்லியில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 42 வது கூட்டம் நடைபெற்றது. சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், காவிரி தொழில் நுட்பக் குழுமம் மற்றும் பன் மாநில நதி நீர்ப் பிரிவின் தலைவர் இரா.சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் – முன்னாள் அமைச்சர்

# வே.தங்கபாண்டியன் 28வது ஆண்டு நினைவு நாள்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிக்கை!

*விருதுநகர், ஜூலை 31 -*

விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழக நிதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சருமான தங்கம் தென்னரசு தந்தையாரும், நமது மாவட்ட தி.மு.கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் வணிக வரித் துறை அமைச்சரும், நம் நினைவில் என்றென்றும் வாழ்ந்து வரும் மறைந்த வே.தங்கப்பாண்டியன் அவர்களின் நினைவு நாளான இன்று (31.07.2025 - வியாழக் கிழமை) காலை 09.00 மணிக்கு மல்லாங்கிணற்றில் உள்ள மறைந்த வே.தங்க ப்பாண்டி யன் அவர்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

அது சமயம், சட்டமன்ற உறுப்பினர்கள், தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதி கள், கழக பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முந்நாள் தலைவர்கள், உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தங்களது இதய அஞ்சலியினை செலுத்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தண்டலம் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் அரசு, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி ஒன்னாவது மண்டலம் பட்டாபிராம் பகுதியில் 18 மற்றும் 19 ஆகிய வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது இதில் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் முகாமை தொடங்கி வைத்து முகாமில் விண்ணப்பித்த ஒரு பெண்மணிக்கு உடனடியாக செவித்திறன் கருவியை வழங்கினார் உடன் ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா, மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதிச் செயலாளர்கள் பொன் விஜயன் , மாமன்ற உறுப்பினர்கள் சுந்தரி கோபி , சுகன்யா சதீஷ், வார்டு செயலாளர்கள் கு.சேகர் பார்த்தசாரதி மா.சேகர், , உள்பட நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.08.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | தூத்துக்குடி தெற்கு | சத்யா மஹால், புதுக்கோட்டை. |

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–2–இல் ஆவடி, மண்டலம்–9–இல் ஒட்டப்பிடாரம், திருச்செந்தூர் மற்றும் திருவைகுண்டம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | ஆவடி | ஜெய் கிரீஷ் திருமண மண்டபம், தண்டுரை, பட்டாபிராம், திருவள்ளூர். |
| 09.08.2025 சனிக்கிழமை | மாலை 3.00 மணி | ஒட்டப்பிடாரம் | சத்யா மஹால், புதுக்கோட்டை. |
| 10.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | திருச்செந்தூர் | ஐ.எம்.ஏ. மஹால், திருச்செந்தூர். |
| | மாலை 3.00 மணி | திருவைகுண்டம் | மல்லிகை மஹால், ஆத்தூரான்கால். |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 30.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (30.7.2025) துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் 700 புதிய குடியிருப்பு பகுதி பணிகளை துரிதபடுத்தும் வகையில் அமைச்சர் .பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, தலைமை திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர்கள் (சி.எம்.டி.ஏ.) மகாவிஷ்ணு, (TNUHDB) .லால்பகதூர், கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், .இளம்பருதி, சென்னை குடிநீர் வாரியம், மின்சாரத் துறை, மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.